# ரொறன்ரோ பாலர் பேச்சு, மொழி சேவைகள் என்றால் என்ன?

ரொறொன்ரோச் சிறார்களின் பேச்சு மொழிச்சேவைகள் பகுதி என்பது ஒரு சமூகசேவை இணைப்பாகும். குழந்தைகள் பிறந்த நாள் முதல் பள்ளி செல்லும் வயதாகிய 5 வயதுவரை அவர்களின் பேச்சு வளம் மொழித்திறன் என்பனவற்றை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். சமூக மட்டத்தில் இயங்கும் இத்திட்டம் குடும்பத்தவர்களுக்கும், பிள்ளைகளுக்கும் செய்திகளையும், சேவைகளையும் வழங்குகின்றது. குழந்தைகள் பராமரிப்பு, மருத்துவமனைகள், சமூகசேவை அமைப்புகள், சமூக நலன்பேணல், சிறுவர் பள்ளிகள் என்பன இதில் அடங்கும்.

குழந்தைகளின் வயதிற்கு ஏற்ப பேச்சுவளம், மொழித்திறன் என்பன எப்படி வேறுபடுகின்றன என்று இந்தக் கையேடு கூறுகின்றது. ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு விதம் என்பதை நினைவில் வைத்திருக்கவும். உங்கள் எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு பேச்சுவளம் குன்றியிருந்தால் எமது பேச்சு வள மொழித்திறன் பகுதியை அழைக்கவும்.

**395-0411**

## குழந்தைகள் எவ்வாறு தம்தேவைகளை பிறர் அறியவைக்கக் கற்றுக் கொள்கிறார்கள்? (0 - 2 வயது)

தன்னைச்சுற்றிக்கேட்கும் குரல்களையும், ஒலிகளையும் வைத்து ஒரு குழந்தை தான் தொடர்புகளை ஏற்படுத்தக் கற்றுக் கொள்கிறது. தனக்கு என்ன தேவை, தன் உணர்வுகள் என்ன என்பதை ஒலி மூலம் தெரிவிக்கக் கற்றுக்கொள்கிறது. குழந்தைகளின் இவ்வளர்ச்சி அவர்களின் வேகத்தைப் பொறுத்தது. சில குழந்தைகள் மிக இளம் பிராயத்திலேயே பல செய்கைகளைக் கற்றுக்கொள்கின்றன. அதுபோல சில குழந்தைகளுக்கு இதற்கு கூடிய காலம் தேவைப்படுகிறது. கீழே உங்கள் குழந்தைகள் செய்யக்கூடிய, கற்கக்கூடிய சிலவற்றைத்தருகிறோம்.

## 3 மாதங்கள் மட்டுமே ஆன குழந்தைகள்

★ பெரும் ஒலி கேட்பின் துள்ளுதல்
★ ஆதரவான குரலில் பேசினால் அமைதியாக இருத்தல்
★ உங்களை நோக்கிப் புன்னகைத்தல்

## 6 மாதங்கள் ஆன குழந்தைகள்

★ நீங்கள் பேசும்போது உங்கள் முகத்தைப் பார்த்துக்கொண்டிருத்தல்
★ உங்கள் கவனத்தைப்பெற ஒலிகளை ஏற்படுத்தல் நீங்கள் பேசும்போது ஒலிகளை ஏற்படுத்தல்
★ உங்களை நோக்கியும் இதர குடும்ப அங்கத்தவர்களையும் நோக்கிப் புன்னகைத்தல்

### உதவிக்கு எப்போது அழைக்கலாம்?

★ உங்கள் குழந்தை உங்கள் குரலுக்கோ அல்லது வேறு ஒலிகளுக்கோ எவ்வித பிரதிபலிப்பையும் கொடுக்காமல் இருந்தால் அழைக்கவும்.
★ உங்கள் குழந்தை புன்னகைக்காமலும், விழிப்பாய் இருக்கும்போது எவ்வித ஒலியையும் கொடுக்காமல் இருந்தாலும் அழைக்கவும்.

### உங்கள் குழந்தை இவற்றைக் கற்பதற்கு நீங்கள் எவ்விதம் உதவலாம்?

★ குழந்தைகளைக் கழுவும்போதும், உடைஅணிவிக்கும்போதும், உணவு கொடுக்கும்போதும் குழந்தையுடன் நிறையப் பேசுங்கள்
★ பாடல்கள், குழந்தைப்பாடல்கள் போன்றவற்றைப் பாடுங்கள்
★ சிறுசிறு விளையாட்டுக்களில் ஈடுபடுத்துங்கள்
★ படங்கள் உள்ள நூல்களைக்காட்டி நீங்கள் பார்ப்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்.
★ அவர்களுடன் பேசும்போது உங்கள் குழந்தையைப்பார்த்தவண்ணம் இருங்கள்.

## 12 மாதங்கள் ஆன குழந்தைகள்

★ தங்கள் பெயர்களைத்தெரிந்திருக்கும் போய்வருகிறோம், மேல், கீழ் போன்ற சொற்களை விளங்கிக் கொள்ளும்.
★ பா, பா, நா, நா, கா என்ற ஒலிகளைக் கூறும்.
★ உங்களைப்போன்று சிரிப்பையும், ஒலிகளையும் ஏற்படுத்தும்

### எப்போது உதவி பெற அழைக்கலாம்?

★ போய்வருகிறோம் என்று சொல்லும்போது உங்கள் குழந்தைகள் உங்களை நோக்கி கையை அசைக்கவில்லை என்றால்,
★ உங்களுக்குப்பொருட்களைக் காட்ட கைகளை உயர்த்தவில்லை அல்லது பார்க்கவில்லை என்றால்.., உதவிக்கு அழையுங்கள்.

## 15 மாதங்கள் ஆன குழந்தைகள்

★ மற்றொருவருடன் சேர்ந்து ஒலிகளை எழுப்பும். இரண்டு, மூன்று வார்த்தைகளைக் கூறும்
★ "இல்லை" என்பதைப் புரிந்துகொண்டு தலையை ஆட்டும். தனக்கு வேண்டிய பொருளைக்காட்டி கேட்கும், ஒலி எழுப்பும்.
★ உங்களுடைய மூக்கு எங்கே? உங்களுடைய காலணி எங்கே? என்ற கேள்விகளைப் புரிந்து பதிலளிக்கும்.

### எப்போது உதவிக்கு அழைக்கலாம்?

★ சொற்களைக்கூற உங்கள் குழந்தை எத்தனிக்காமல், அல்லது தனக்கு என்ன வேண்டும் என்பதைக் கேட்பதற்கு ஒலிகள் அல்லது பாவனைகளை ஏற்படுத்தாமல் இருந்தால் உதவிக்கு அழையுங்கள்.



## 18 மாதங்கள் ஆன குழந்தைகள்

★ சொற்களைப் புரிந்துகொள்ளவும், காது, மூக்கு முதலிய தமது உடலுறுப்புக்களைச் சுட்டிக்காட்டவும் பயில்வர்.
★ உமது தொப்பியைக் கொண்டு வாரும் என்பன போன்ற பணிப்புகளை ஏற்றுப்பொருட்களை எடுத்து வருவர்.
★ நீங்கள் செய்வது போன்ற சைகைகளைச்செய்யவும் சொற்களைச்சொல்லவும் பயில்வர்.
★ எதையாவது திரும்பக்கேட்கவும், அதிகம் கேட்கவும் முயல்வர்.

### எப்போது உதவிக்கு அழைக்கலாம்?

★ நீங்கள் செய்வது போன்ற சைகைகளையோ ஒலிகளையோ செய்யாத போது.

★ சொற்களை உபயோகிக்கத் தொடங்கிப்பின் உபயோகிப்பதை நிறுத்தி இருப்பின்.

## 21 மாதங்கள் ஆன குழந்தைகள்

★ படங்கள் அல்லது சின்னங்களை அடையாளம் காண்பர். "மக்டொனால்ட் எங்கே இருக்கிறது?"
★ விளையாட்டுப்பொருட்களைக் கையாண்டு பொம்மைக்குப் பால் கொடுப்பதாக அல்லது வாகனத்தில் பயணிப்பதாகப் பாவனை செய்வர்.
★ 10 அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களைப் பேசுவர் பானத்தைக்குடி, இரு, போன்ற கட்டளைகளை ஏற்று நடப்பர்.

### எப்போது உதவிக்கு அழைக்கலாம்?

★ பத்துச்சொற்களுக்குக் குறைவாக உபயோகிக்கும்போது விளையாட்டுப்பொருட்களுடன் விளையாடும் பாவனையில் ஈடுபடாதபோது.

## 24 மாதங்கள் ஆன குழந்தைகள்:

★ தாங்கள் சொல்வதை விட அதிகமாகப் புரிந்துகொள்வர். சேர்ந்தாற்போல் இரண்டு சொற்களைப் பேசுவர் (இன்னும் பால்)
★ அது என்ன என்று கேட்பர் (ஒலி வேறுபடலாம்)
★ ஒரு தொகுதிப்பொருட்களில் இருந்து நாம் குறிப்பிட்ட பொருளைத் தெரிந்து எடுப்பர்.

### எப்போது உதவிக்கு அழைக்கலாம்?

★ உங்கள் குழந்தை சொல்வதை விளங்கிக் கொள்வதில் நீங்கள் மிகுந்த சிரமப்படும்போது.
★ மிகவும் குறைவான சொற்களையே உபயோகிக்கும்போது அல்லது சொற்களைச் சேர்க்காதபோது

### இவ்வயதில் உங்கள் குழந்தையைப் பயிற்றுவதில் நீங்கள் எவ்வாறு உதவலாம்?

★ உங்கள் பிள்ளையோடு பேசும்போது இலகுவாகவும், தெளிவாகவும், ஆறுதலாகவும் பேசுங்கள்
★ உங்கள் குழந்தை உங்களுடன் உரையாடும்போது குழந்தையை நேராகப் பார்த்துக் கேளுங்கள்
★ உங்கள் குழந்தை பேசுவதற்கு எடுக்கும் முயற்சியைப் பாராட்டுங்கள்.
★ குழந்தையோடு சேர்ந்து குழந்தைகளுக்கான இசையையோ கதையையோ கேளுங்கள்
★ புதிய இடங்களுக்குப் போகுமுன்னரும் புது அனுபவங்களைப் பெறமுன்னரும் அவைபற்றிப்பேசி அவற்றை நடைமுறைப்படுத்தும்போதும் வீடு வந்த பின்னரும் அவைபற்றிப் பேசுங்கள்
★ குழந்தை சொல்வதை விரிவுபடுத்த உதவுங்கள் "நாய்" என்று பிள்ளை சொன்னால் "பெரியநாய்" என்று விரிவுபடுத்துங்கள்.
★ உங்கள் குழந்தையைப்பேசவைக்கும் விதத்தில் கேள்வி கேளுங்கள்
★ ஒலிகளை எழுப்பி ஊக்குவியுங்கள்
★ புதிய ஒலிகளைக் கேட்கச்செய்யுங்கள்.



# ஒரு குழந்தையின் பேச்சுவளமும் மொழியும் எப்படி வளர்ச்சி அடைகிறது?
## (2 - 5 வயது)

இவ்வயதிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குழந்தைகள் பலவற்றைக் கற்றுக்கொள்கிறார்கள். சொல்வளம் மிகுந்து வரும். தமது அன்றாட வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகள் பற்றி கேள்விக்கணைகள் தொடுக்கும்பொழுது அவர்களின் பேச்சுப் பாவனையும் விரிவடைகிறது. கதைகள், இசை போன்றவற்றைக் கேட்பதற்கு மிகவும் விருப்பமாக இருப்பார்கள். ஒரே கதையைத் திரும்பத் திரும்ப படிக்கும்படி உங்களைக் கூறுவார்கள். சில சமயங்களில் அக்கதைகளில் வரும் சொற்களை நினைவில் வைத்திருப்பார்கள். இதனால் அக்கதையைத் தாங்களே படிக்கலாம் என்ற உணர்வினைப் பெறுவார்கள். பள்ளிக்குச் செல்வதற்கு தயாராகும் வயதில் அக்குழந்தைக்கு சரளமாகப் பேசவும் விளங்கிக்கொள்ளவும் முடிகின்றது.

---

## 2-3 வயதான குழந்தைகள்:

★ நான் செய்கிறேன், அப்பா போயிற்றார், போன்ற சிறுவரிகளைக் கூறும்.
★ சிறு இயக்கங்களைக் கண்டு கூறும். (படு, நட) மேலே, கீழே, உள்ளே என்ற சொற்பதங்களை விளங்கிக்கொண்டு அதன்படி செய்யும்.
★ குடும்ப அங்கத்தவர்கள், அல்லது தெரிந்தவர்களுடன் சிறு உரையாடல்களை நடத்தும்.
★ கதைகள் கேட்டுக் கேள்விக் கேட்பார்கள்.
ஓடுதல், விளையாட்டுப்பொருட்கள், பொம்மை போன்ற அனைத்தையும் தெரிந்து கொள்ளும்.

### எப்போது உதவிக்கு அழைக்கலாம்?

★ உங்களுடன் பேசாமல், பிடிவாதமாய், கோபமாய் நடந்தால் அல்லது உங்கள் குழந்தை என்ன கூறுகிறது என்பது உங்களுக்கு விளங்காவிட்டால் அல்லது
★ 2 சொற்களுக்கு மேல் இணைத்துக் கூறாமலிருந்தால்,
★ உங்கள் குழந்தை எதையும் தெளிவாகக் கேட்காமல் இருந்தால் அழையுங்கள்.

## 3-4 வயதான குழந்தைகள்:

★ 4-6 சொற்கள் கொண்ட வசனங்களை உபயோகிப்பர்
★ "இதை" எனக்குப்பொருத்தித்தாருங்கள் போன் கட்டளைகளை இடும்.
★ என்ன, எங்கே எப்படி என்று பல கேள்விகளை எழுப்புவர்
★ தாம் செய்தவை பற்றிப்பேசுவர்.
★ தமக்குள்ளேயே, விளையாட்டுப்பொருட்களுடனே பேசுவர்.
★ கதை, பாட்டு சொல்வர்
★ தாம் உணர்பவைகளை வெளிப்படுத்துவர்
(எ.கா: எனக்குக் களைப்பாக இருக்கிறது)

### எப்போது உதவிக்கு அழைக்கலாம்?

★ சொல்வதைத் திரும்பச்சொல்லமுடிந்து விளங்கிக்கொள்ளமுடியாதபோது.
★ திக்கித்திக்கிப்பேசும்போது
★ உங்கள் குழந்தை பேசுவதை மற்றவர்கள் புரிந்து கொள்ள சிரமப்படும்போது
★ வழமைக்கு மாறான வகையில் சொற்களைக் கூறும்போது

### இந்த வயதில் உங்கள் குழந்தை கற்பதற்கு நீங்கள் எவ்வாறு உதவலாம்?

★ உங்கள் குழந்தை பேசும்போது கவனித்துக்கேட்டுத் தலையாட்டி சிரித்து அது உங்களுக்குப் புரிவதாகக் காட்டி குழந்தை கேள்வி கேட்கும்போது பதிலளியுங்கள்
★ உங்கள் குழந்தையை மற்றக் குழந்தைகளுடன் விளையாட விடுங்கள்
★ பொருட்கள் விடயங்களில் உள்ள ஒற்றுமை வேறுபாடு பற்றிப்பேசுங்கள்
★ உங்கள் குழந்தை தனது உணர்வுகள், கருத்துக்களை வெளியிட அனுமதியுங்கள்
★ உங்கள் குழந்தைகள் கூறக் கடினப்படும் சொற்கள், ஒலிகளை அதிகம் பயன்படுத்துங்கள். நீங்கள்
★ சொல்லும்போது உங்கள் வாயைப்பார்த்து சொல்லும்படி ஊக்குவியுங்கள்.
★ நீண்ட கதைகளை வாசியுங்கள். படங்கள், புத்தகங்களின் உதவியுடன் குழந்தைகளைக் கதை கூறுவதில் ஊக்குவியுங்கள்.

## 5 வயதான குழந்தைகள்

★ பெரியவர்கள் மாதிரியே வசனங்களைப்பேசுவர்
★ பெரும்பாலான ஒலிகளைச் சரியாக உச்சரிப்பர்
★ தெரிந்த சொற்களின் கருத்தை விளக்குவர்
★ பொருட்கள், நிகழ்ச்சிகளை வசனங்களால் வெளிப்படுத்துவர்.
★ சிறு கணக்குகளைத் தீர்க்கும் முறையை விபரிப்பர்
★ தொடரான கட்டளைகளை ஏற்று நடப்பர்
உ.ம்: "கிறேயோன் கொண்டு வந்து படம் கூறி அதைச் சுவரில் கொழுவு"

### எப்போது உதவிக்கு அழைக்கலாம்?

★ முழுமையான வசனத்தை உங்கள் குழந்தை உபயோகிக்காதபோது
★ மற்றப்பிள்ளைகளுடன் உரையாட விரும்பாதபோது கட்டளைகளை ஏற்கச் சிரமப்படும்போது..



## உங்களுக்கு உதவி தேவையாயின் தாமதிக்கவேண்டாம்!

றொறன்ரோ நகர பாலர்கள் பேச்சுவள, மொழிவளச் சேவைகள் பிரிவினை அழையுங்கள்.
தொலைபேசி எண்: (416) 395 0411

★ உங்கள் குழந்தை தெளிவாகப்பேசவில்லை என்று கவலைப்படுகிறீர்களா?
★ உங்கள் குழந்தையின் பேச்சுத் தொடர்புகளைப் பற்றிய கேள்விகள் உள்ளனவா?
★ இவற்றுக்கு உதவிகளை எப்படிப் பெறலாம் என்று அறிய விரும்புகிறீர்களா?

Toronto Preschool Speech & Language Services

ஒட்டாவா-காள்ரன் சிறார்கள் பேச்சு மொழிப்பிரிவின் இச்செய்திக்கையேட்டினை மறுஅச்சுச் செய்ய எமக்கு அளித்த அனுமதியை நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறோம்.

றொறன்ரோ சுகாதார சேவைகள்

# றொறன்ரோ நகர பாலர்கள் பேச்சுவள, மொழிவளச் சேவைகள்

- நேரகாலத் தலையீடு
- இலகுவான வழி
- கணிப்பீடு
- பல்வகைச் சேவைகள்
- மாற்றுத் திட்டங்கள்
- பெற்றோர் பங்கு
- பொதுமக்கள் விழிப்புணர்வு



TORONTO Public Health • Ontario • Community Partners

Tamil